குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 202/2022

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.சரோஜா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 36 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 05.12.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1)** நான் அட்டகுறிக்கி கிராமத்தில் குடியிருந்து தையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி சூளகிரியில் துணிக்கடை வைத்துள்ளார். சம்பவ தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பாக ஆஜர் எதிரியின் துணிக்கடையில் இரண்டு புடவை வாங்கி வந்தேன். மேற்படி இரண்டு புடவைகளில் ஒரு புடவை சேதமடைந்திருந்ததால் அதனை மாற்றிக்கொள்ள 04.11.2018-ம் தேதி ஆஜர் எதிரியின் கடைக்கு மதியம் 2 மணியளவில் நான் சென்று பார்த்தபொழுது கடையில் நான் புடவை எடுக்கும்பொழுது ஆஜர் எதிரி அப்பொழுது கடையில் இல்லை. அவரது மனைவிதான் கடையில் இருந்தார். அப்பொழுது ஆஜர் எதிரி வந்த பிறகு புடவையை மாற்றிக்கொள்ளலாம் எண்ணி கட்டைப்பையில் வைத்து கையில் வைத்துக்கொண்டு வேறு துணிகளை எடுப்பதற்காக கடையில் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, கடையில் வேலை செய்து கொண்டிருந்த சுமார் 20 -22 வயது

மதிக்கத்தக்க நபர் என் கட்டைப்பையில் இருந்த புடவையைப் பார்த்து கடையில் இருந்து திருடி புடவையை மறைத்து வைத்துளளாயா என்று கேட்டு ஆஜர் எதிரியின் மனைவியிடம் அழைத்துச் சென்றார்.

2) ஆஜர் எதிரியின் மனைவியிடம் மேற்படி புடவையை மாற்றிக்கொள்ள வேண்டும் எடுத்து வந்ததாகவும் ஆஜர் எதிரி அப்பொழுது இல்லாததால் அவர் வந்த பின் மாற்றிக் கொள்ள எண்ணி வைத்திருந்ததாக கூறினேன். அதற்கு ஆஜர் எதிரியின் மனைவி அதற்கு ஒப்புக்கொள்ளாமல் கடையில் வேலை செய்யும் ஊழியரிடம் போனில் ஒளிப்பதிவு செய்துகொள்ள கூறினார். எதியின் கடையில் பணிபுரியும் நபர்கள் எதிரிக்கு கைபேசி மூலமாக தகவல் தெரிவித்து, அதன் அடிப்படையில் எதிரியும் அவருடன் பெயர் தெரியாத மற்றொரு நபரும் சம்பவ இடத்திற்கு வந்தனர். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்தவுடன் எனது வலது கன்னத்தில் கையால் அடித்துவிட்டார்.

3) அதன்பிறகு ஆஜர் எதிரியுடன் வந்த மற்றொரு நபர் எனது தலைமுடியைப் பிடித்து அடித்தார் என்னை அடித்தவர்கள் பார்த்தேன் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர்கள் என்னை அடித்ததை வலைதளங்களில் பதிவேற்றம் செய்துவிட்டார்கள். மேற்படி எதிரி வலைதளத்தில் பதிவேற்றிய வழக்கு சம்பவம் குறித்த ஒளிப்பதிவை எனது உறவினர் பதிவிறக்கம் செய்து மின்தகடில் எனக்கு வழங்கியுள்ளார். மேற்படி மின்தகடை உரிய சான்றுடன் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஓம்/ வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.